# ONGC PUBLIC SCHOOL
# NERAVY - KARAIKAL

Master. Vivian Joeyal MS (Class 4-B) has secured third position in regional level science exhibition ( Primary Level) conducted by education department, Karaikal.





## காரைக்கால் மாவட்ட கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சி திருவிழா நடைபெற்றது

காரைக்கால், டிச. 10-

புதுவை அரசு காரைக்கால் மாவட்ட கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து கோவில்பத்து அரசு உயர்நிலைப் பள்ளியில் மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சி திருவிழா மூன்று நாட்கள் நடைபெற்ற நிலையில் மூன்றாம் நாளான நேற்று கண்காட்சியின் நிறைவு விழாவாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிரவி-திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா பள்ளி தலைமை ஆசிரியர் குமார் வட்டம் 1 மற்றும் வட்டம் 2 மேலும் அனைத்து பள்ளிகளை சேர்ந்த ஆசிரிய பெருமக்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் திரளாக கலந்து கொண்டனர்.

அறிவியல் படைப்புகளில் சிறப்பாக படைத்த மாணவர்களுக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் பரிசு பெற்ற அனைத்து மாணவர்களும் புதுவையில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள உள்ளார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வினை அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கண்டுகளித்து அறிவியல் சம்மந்தமான படைப்புகளை பார்த்து பயன் பெற்றார்கள். மேலும் அறிவியல் சம்பந்தமான அறிவை மேம்படுத்திக் கொள்ள மாணவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

மொத்தம் 170 பள்ளிகளில் இருந்து 256 படைப்புகள் அறிவியல் கண்காட்சியில் மாணவர்களால படைக்கப்பட்டிருந்தன. 104 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்து ஒன்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்த அறிவியல் கண்காட்சியினை கண்டுகளித்தார்கள்.

. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வினை காளிதாஸ் சிறப்பாக செய்திருந்தார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பரிசுகள் வழங்கினார்.